**செய்தி வெளியீடு எண்: 503** **நாள்: 26.10.2016**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் **திருமதி. எஸ். வளர்மதி** அவர்கள் தலைமையில் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் அலுவலர்களின் (கரூர் , தஞ்சாவூர் மற்றும் மதுரை தவிர) ஆய்வுக்கூட்டம் **26.10.2016** அன்று சென்னையில் நடைபெற்றது. ஆய்வுக் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலர் / ஆணையர் திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் திரு.மா.சந்திரசேகரன், இ.ஆ.ப., இணை இயக்குநர், (கள்ளர் சீரமைப்பு ) மதுரை மற்றும் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத்துறையின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பினரின் கல்வி, சமூகம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு அரசு செயல்படுத்தி வரும் திட்டப்பணிகளின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்தார்கள்.

திட்ட பயன்கள் உரிய நேரத்தில் ஏழை எளிய மக்களை சென்றடையும் விதத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் திறம்பட பணியாற்றிட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

அனைத்து விடுதிகளையும் மாதந்தோறும் ஆய்வு செய்து அவை நல்ல முறையில் செயல்படுவதை உறுதி செய்யவும், மாணவர்களுக்கு பாதுகாப்பான, சுகாதாரமான இருப்பிடம் மற்றும் தரமான உணவு கிடைப்பதை உறுதி செய்வதன்மூலம் அவர்கள் கல்வி கற்பதில் அதிக கவனம் செலுத்தி உயர் மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்திட வழிவகுக்க வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை தாமதமின்றி உரிய நேரத்தில் அவர்களது வங்கிக்கணக்கில் சென்றடைவதை உறுதி செய்யவும், 2016–17 ம் ஆண்டில் +1 பயிலும் மாணவ , மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் காலதாமதம் இல்லாது விநியோகம் செய்திட அறிவுறுத்தினார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்களுக்கு விலையில்லா வீட்டு மனை, விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி வழங்குவதில் முனைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

நடப்பு ஆண்டில் இத்துறை விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12 ம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்களுக்கும், கல்லூரி விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சியினை (Career Guidance Programme) சிறப்பான முறையில் நடத்திட அறிவுரை வழங்கினார்கள்.

கல்லூரி விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ மாணவியர்களுக்கு ஆங்கில பேச்சாற்றல் மற்றும் அவர்களது தனித்திறனை வளர்க்கும் பயிற்சியினையும் சிறப்பான முறையில் செயல்படுத்திட தக்க அறிவுரைகள் வழங்கினார்கள் .

கல்லூரி விடுதி மாணவ / மாணவியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வரும் பாய்களுக்குப் பதிலாக ரூ.25.00 இலட்சம் செலவில் ஜமக்காளம் வழங்கப்பட உள்ளது குறித்தும் , கல்லூரி விடுதிகளுக்கு ரூ.66.00 இலட்சம் செலவில் நவீன மாவரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளது குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலமாக இதுவரை இல்லாத அளவில் நடப்பாண்டிற்கு ரூ. 100 கோடி ஒதுக்கீடு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்டிய மாண்புமிகு அமைச்சர் அவர் டாப்செட்கோ மூலம் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட இன மக்களுக்கு வழங்கப்படும் கடன் உதவி திட்டங்கள் விரைவுப்படுத்த அறிவுறுத்தினார்கள்.

அதேபோல் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலமும் நடப்பாண்டிற்கு ரூ.35 கோடி ஒதுக்கீடு பெறப்படவுள்ளமையால் சிறுபான்மையின பயனாளிகள் கூடுதல் அளவில் பயனடைய சீரிய முறையில் மாவட்ட அலுவலர்கள் செயலாற்றிட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்கள்.

மொத்தத்தில் இத்துறைக்கு நடப்பாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.1046.41 கோடி நிதியினை முழுமையாகப் பயன்படுத்தி துறைக்கும் அரசுக்கும் நற்பெயர் ஈட்டித் தந்திட கேட்டுக் கொண்டார்கள்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**